# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No. 123/2022

சாட்சி : PW– 1
பெயர் : திரு. சண்முகம் தேதி : 28.08.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**:– ( பிரதிவாதி தரப்பில்)

நான் 06.08.2020 அன்று 1200 சதுரடிகள் கொண்ட சொத்திற்கு பட்டா கோரி விண்ணப்பித்தேன். மேற்படி விண்ணப்பத்தின் நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பட்டா பெயர்மாற்றம் கோரி வருவாய் கோட்டாட்சியருக்கு விண்ணப்பம் செய்தேன். பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு வருவாய் கோட்டாட்சியருக்கு அதிகாரம் இல்லை என்றும், வருவாய் வட்டாட்சியருக்கு தான் அதிகாரம் உள்ளது என்றும், எனவே வருவாய் கோட்டாட்சியரிடம் நான் விண்ணம் செய்ததாக சொல்லும் சங்கதி தவறானது என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்வற்கு முன்பாக சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று குறிப்பிட்டு பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. குற்றபுகார் கொடுத்துள்ளேன். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடம் தவறானது என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே பிரதிவாதி அ.வா.எண் 494/2021 என்ற வழக்கை சேலம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருந்தார் என்றால் சரிதான். நான் பிரதிவாதி மீது நிலஅபகரிப்பு பிரிவில் புகார் கொடுத்தபிறகு இவ்வழக்கு தாக்கல் செய்தார். மேற்படி வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பதில் உரையில் பிரதிவாதி எவ்வளவு சதுரஅடிகளை எந்த தேதியில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று குறிப்பாக தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 6

R Velaras
Digitally signed by R Velaras
Date: 2026.08.28 17:15:33 +0530
I Additional District Judge,
Salem

ஆவணம் நான் கேட்டதின் பேரில் தான் வழங்கபட்டதாகும். மேற்படி வா.சா.ஆ 6 ல் சர்வே எண் 7/15 என குறிப்பிடபட்டுள்ளது. எனது கிரையபத்திரத்திலோ எனது மனைவியின் கிரையபத்திரத்திலோ சர்வே எண் 7/15 என குறிப்பிடபட்டுள்ளதா என்றால் குறிப்பிடபட்டுள்ளது. மேற்படி கிரைய ஆவணங்களில் சர்வே எண் 7/15 குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. என் மனைவி சொத்திற்கும், இவ்வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். எனக்கு பொதுஅதிகாரம் கொடுத்த ரத்தினம் 03.03.2001 ல் இறந்துவிட்டார். பொதுஅதிகார பத்திரம் எழுதிகொடுத்த நபர் இறந்தவுடன் மேற்படி பொதுஅதிகார பத்திரம் தானாகவே ரத்தாகிவிடும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதனை நான் பிறகு தான் தெரிந்து கொண்டேன். மேற்படி ரத்தினத்தின் வாரிசுகளிடமிருந்து உள்நோக்கத்துடன் 2019 ம் ஆண்டு பொதுஅதிகார ரத்து பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ரத்து பத்திரம் எழுதப்பட்ட 16.10.2019 தேதியிலேயே ரத்தினத்தின் வாரிசுகளிடமிருந்து கிரைய ஆவணம் எழுதிகொண்டுள்ளேன் என்றால் சரிதான். ரத்தினத்திடமிருந்து பெறப்பட்ட பொது அதிகாரபத்திரத்தில் சர்வே எண் 7 என்றுதான் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். 16.10.2019 அன்று எழுதப்பட்ட கிரையபத்திரத்தில் சர்வே எண் 7/1 என்று தான் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். எனது கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்திற்கு ஒரு பகுதி சக்குபந்தியாக பிரதிவாதிகளின் சொத்து காண்பிக்கபடவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 7/1 என்பது தான் பின்னிட்டு 7/15 என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொத்தை அளந்து கிரையம் பெறாமல் 09.09.2020 அன்று பிரதிவாதியின் சொத்தை அளக்க முயற்சித்த காரணத்தினால் தான் பிரதிவாதி அ.வ.எண் 494/2021 என்ற வழக்கை சேலம் சார்பு நீதிமன்றத்தில்

R Velaras
Digitally signed by R Velaras
Date: 2026.08.28 17:15:38 +0530

I Additional District Judge,
Salem

தாக்கல் செய்ய நேர்ந்து என்றால் சரியல்ல. நான் சம்மந்த பட்ட நிலஅளவையர் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி மூலமாக எனது சொத்தை அளவீடு செய்வதற்கு விண்ணப்பமே கொடுக்கவில்லை என்றும், நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தனியார் நிலஅளவையருக்கு பிரதிவாதியின் சொத்தில் நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்த காரணத்தினால் தான் பிரதிவாதி அ.வ.எண் 494/2021 என்ற வழக்கை சேலம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நேர்ந்து என்றால் சரியல்ல. பிரதிவாதி அவர் சொத்தில்தான் கட்டடம் கட்டி சுவாதினத்தில் இருந்து வருகிறார் என்றும், அதனை இடையூறு செய்யும் விதமாகவும் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கும் விதமாகவும் தவறாக சங்கதிகளோடு நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண் 123/2022 வழக்கை தள்ளுபடி செய்தும் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அ.வ.எண் 596/2023 வழக்கை அவர்கோரியபடி அனுமதித்தும் தீர்ப்பளிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

R Velaras Digitally signed by R Velaras Date: 2026.08.28 17:15:44 +0530

I Additional District Judge,
Salem

I Additional District Judge,
Salem